(ஆ) ஆம் எனில், அந்த இணைப்புப் பாதையை இலவசமாக நகராட்சிக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மேற்படி நிலம் 'வாய்க்கால் புறம்போக்கு' என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே நகராட்சிக்கு இந்நிலத்தை இலவசமாக வழங்க இயலாது.

507—

கால்நடை மருந்தகங்களுக்கு மருந்து வழங்குதல்

*** 35756**—*திரு. கே. ஏ. மனோகரன்:*

திரு. மு. வெங்கடராம ரெட்டி:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோடைகாலத்தில் வரும் Foot and Mouth வியாதிகளுக்கு இங்குள்ள அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் இன்மையால் உடனடியாக அம்மருத்துவமனைகளுக்கு மருந்துகள் அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடைகளுக்கு கோடைகாலங்களில் வரும் கால் மற்றும் வாய் நோய்களுக்கு உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்மூலம் அரசு மருத்துவமனைகளில் போதிய மருந்து கையிருப்பில் வைக்கும்பொருட்டு, நடப்பாண்டில் தர்மபுரி மாவட்டத்திற்கு மட்டும் 10,000 டோஸ்கள் கால் மற்றும் வாய் நோய்த் தடுப்பு மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

508—

பாண்டி வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டுதல்

***22583**—*திரு. வீ. சுப்பிரமணியன்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மே 2]

விக்ரவாண்டி ஒன்றியம், இராதாபுரம் கிராமத்தையும், வாக்கூர் கிராமத்தையும் இணைக்கின்ற வகையில் பாண்டி வாய்க்காலின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

ஆம். வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் அமைக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர் கைது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) நான் ஒரு அறிவிப்புக் கொடுத்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் ஒரு அறிவிப்புச் சொல்லிவிடுகிறேன். பிறகு நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பாக இன்றைக்கு எடுத்துக்கொள்வதாக இருக்கிறேன். (குறுக்கீடு) உங்களுடையதை இன்று எடுத்துக்கொள்கிறேன்.

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் மற்றும் தர்மபுரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களிடமிருந்து 1-5-1995 ஆம் நாளிட்ட மற்றும் 2-5-1995 ஆம் நாளிட்ட தொலை அச்சுச் செய்திகளில் கீழ்க்கண்ட தகவல்கள் வரப்பெற்றுள்ளன: